**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 167/2017**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 7 |
| Name (திரு/திருமதி) | : கோபிநாத் |
| Father's Name/ Husband's Name | : நடராஜன் |
| Village & Taluk | : திருவண்ணாமலை |
| Calling | : கிராம நிர்வாக அலுவலர் |
| Age | : 50 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2026**

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி இறந்துவிட்டார்.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் வட்டம் 37 காட்டு மலையனூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.03.2017 அன்று வளத்தி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது வெங்கடேசன், மற்றும் பாலாஜி வழிப்பறியில் ஈடுபட்டதாக வளத்தி காவல் ஆய்வாளர் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். அவரின் வேண்டுகோளின் பேரில் நானும், கிராம உதவியாளர் ஏழுமலை என்பவரும் வளத்தி காவல் நிலையம் சென்றோம். அங்கு காவலர்கள் மேற்குறிப்பிட்ட இருவரையும் மலையனூரில் அம்மாவாசை அன்று வழிப்பறி செய்த குற்றத்திற்காக கைது செய்திருப்பதாகவும் அவர்களிடம் இருந்து பொருட்களை கைப்பற்றி இருப்பதாகவும் அதற்காக எங்களை சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். மேற்குறிப்பிட்ட எதிரிகளை என்னிடம் அடையாளம் காண்பித்தனர். தற்போது ஆஜரில் இருக்கும் எதிரியையும் மற்றொரு நபரையும் எனக்கு அடையாளம் காண்பித்தனர்.

2. எதிரிகளிடம் இருந்து கைப்பற்றிய பொருட்களான பணம் ரூ.400/-, இரண்டு செல்போன், கருப்புநிற Hero Delex இரு சக்கர வாகனம் ஆகியவற்றை என்னிடம் காவல் ஆய்வாளர் காண்பித்தார். பின்னிட்டு மாலை சுமார் 06.30 மணியளவில் மேற்படி களவு போன பொருட்களை கைப்பற்றி இடமான மேல்மலையனூர் அக்னி குளத்திடம், என்னையும், ஏழுமலை என்பவரையும் காவல் ஆய்வாளர் அழைத்து சென்றார். அங்கு எதிரிகளிடம் இருந்து பொருட்களை கைப்பற்றிய இடத்தை எங்களிடம் காண்பித்தார்கள். பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பங்களை காவல்

நிலையத்தில் வைத்து செய்தேன். பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.7 ன் கையொப்பம் வரிசை முறையே **அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கு தொடர்பாக நான் மொத்தம் 3 கையொப்பங்கள் செய்தேன். மேற்படி 3 கையொப்பங்களையும் நான் காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி அன்று நான் வளத்தில் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன். வளத்தி கிராமத்திற்கு என தனிப்பட்ட முறையில் கிராம உதவியாளர் அப்போது இருந்தாரா என்றால் இருந்தார். எங்கள் கிராமத்தை சேர்ந்த கிராம உதவியாளர் என்னுடன் காவல் நிலையத்திற்கு வரவில்லை என்றால் சரிதான், நான் அப்போது கூடுதல் பொறுப்பு வகித்த வடவெட்டி கிராமத்தின் உதவியாளர் தான் என்னுடன் வந்தார்.

2. நான் கூடுதல் பொறுப்பு வகிக்கும் கிராமத்திற்கான உத்தரவு எனக்கு வழங்கப்படும் என்றால் சரிதான். அவ்வாறான உத்தரவு அப்போது பிறப்பிக்கப்பட்டிருந்தது. மேற்படி உத்தரவின் நகலை நான் காவலர்களிடம் கொடுத்தேனா என்றால் வளத்தி கிராமத்தில் பணியில் இருந்ததால் அதனை காவலர்கள் கேட்கவில்லை நானும் கொடுக்கவில்லை.

3. சம்பவம் மேல்மலையனூரில் நடைபெற்றது. மேற்படி பகுதி என்னுடைய பகுதிக்கு உட்பட்டது அல்ல என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்தார். உதவியாளரை யார் அழைத்தார் என்றால் என்னையும் கிராம உதவியாளரையும் காவல் நிலையத்திற்கு வருமாறு காவல் ஆய்வாளர் அழைத்தார் அதன் பேரில் நான் கிராம உதவியாளரை என்னுடன் அழைத்து சென்றேன். நான் காவல் நிலையத்திற்கு செல்வதற்கு முன்பே செல்போன், இரு சக்கர வாகனம் மற்றும் ரூ.400/– ஆகியவைகள் அங்கு கைப்பற்றி வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

4. இரு சக்கர வாகனத்தின் பதிவு எண் மற்றும் சேசிஸ் எண் தெரியாது என்றால் தற்போது நினைவில் இல்லை. பணம் 100 ரூபாய் தாள்களாக இருந்தது. காவல் நிலையம் சென்று கையொப்பம் செய்துவிட்டு அதன் பின்னிட்டு மேல்மலையனூர் அக்னி குளத்திடம் சென்றேன். உதவியாளரும் என்னுடன் ஜீப்பில் வந்திருந்தார் என்றால் சரிதான்.

5. என் முன்னிலையில் காவலர்கள் எதிரியிடம் இருந்து பொருட்களை கைப்பற்றினார்களா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியும். அவைகள் கைப்பற்றுதல்

மகசர், ஒப்புதல் வாக்குமூலம், மற்றும் ஒரு மகசர் ஆகும். அதன் பெயர் தற்போது நினைவில் இல்லை.

6. பார்வை மகசர் என் முன்னிலையில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, என் முன்னிலையில் தான் தட்டச்சு செய்யப்பட்டது. தட்டச்சு செய்யப்பட்ட ஆவணம் வளத்தில் காவல் நிலையத்தில் பிரிண்ட் எடுக்கப்பட்டது. நான் அங்கு வைத்து கையொப்பம் செய்தேன். நான் காவலர்கள் கேட்டுக்கொண்டேன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/– B. Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.